# 14-09-2023 செய்தி

## மலபார் பயிற்சி

- வருடாந்திர கடற்படை பயிற்சி

**நாடுகள்**

- அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா
- 1992 – இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே இருதரப்பு பயிற்சியாக ஏற்படுத்தப்பட்டது.
- 2015 – ஜப்பான் இணைந்தது
- 2020 – ஆஸ்திரேலியா இணைந்தது

**பயிற்சி நடைபெறும் இடம்**

- இந்திய பெருங்கடல் அல்லது பசிபிக் கடலில் நடைபெறும்.
- 2023 பதிப்பு – முதன் முதலாக ஆஸ்திரேலியா இப்பயிற்சியை தலைமை தாங்குகிறது.

பயிற்சி

– ஒவ்வொரு வருடமும் நடைபெறும்.

**முக்கியத்துவம்**

- இப்பகுதியில் பாதுகாப்பு மற்றும் நிலைத்த தன்மையை உறுதி செய்தல்.
  – இப்பகுதியில் சீனாவின் ஆதிக்கத்திற்கு எதிராக செயல்படுதல்
- இயங்கக்கூடிய தன்மையை அதிகரித்தல்
  – நெருக்கடி காலங்களில் கடற்படை இணைந்து செயல்படச் செய்தல்

**நம்பிக்கை மற்றும் உறுதித்தன்மையை அதிகரித்தல்**

– சிறந்த பயிற்சி மற்றும் தகவல் பரிமாற்றம் செய்தல்

– சாதாரண செயல்பாட்டு முறையை மேம்படுத்தல்

- நான்கு நாடுகளுக்கிடையே வளரும் கூட்டுறவின்அடையாளமாக இருக்கும்.
- இந்தோ – பசிபிக் பகுதியில் அமைதி மற்றும் நிலைத்தன்மையை அதிகரிக்க உதவும்.
- அதிகார நடுநிலைத்தன்மையை பேணுதல் மற்றும் நாடுகளுக்கிடையே புரிந்துணர்வை அதிகரித்தல்.

## பிரிக்ஸ்

**விரிவாக்கம்**

- பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா

**பிரிக்**

- 2001ல் ஜிம் ஓ நில் எனப்படும் பிரிட்டிஸ் பொருளாதார வல்லுநர் அறிமுகம் செய்தார்.
- 2006 பிரிக் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் முதல் மாநாடு நடைபெற்றது.
- 2009 பிரிக் கூட்டமைப்பின் முதல் கூட்டம் ரஷ்யாவில் யெகாடெரின்பெர்க் நகரில் நடைபெற்றது.
- 2010 டிசம்பர் 24 – தென் ஆப்பிரிக்காவானது இக்கூட்டமைப்பில் இணைய அழைப்பு விடுக்கப்பட்டது.

**பிரிக்ஸ் – ன் முக்கியத்துவம்**

- உலக மக்கள் தொகையில் 41%
- உலக வர்த்தகத்தில் 16%

## லிபியாவில் 20,000 பேர் உயிரிழந்திருக்கலாம்

- வாடி டெர்ணா நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை உடைந்து , அதிலிருந்த வெள்ள நீர் டெர்ணா நகரையும், அதன் சுற்றியுள்ள பகுதிகளையும், மத்தியதரைக் கடலுக்குள் அடித்துச் சென்றது.
- மத்தியதரைக் கடலையொட்டி அமைந்துள்ள வட ஆப்பிரிக்க நாடான லிபியாவின் கிழக்குப் பகுதியை அந்தக் கடலில் உருவான சக்திவாய்ந்த டேனியல் புயல் மிகக் கடுமையாகத் தாக்கியது.
- இதனால் பெய்த கனமழையில், அந்தப் பகுதியில் மலையிலிருந்து பாயும் வாடி டெர்ணா நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை மிகப் பெரிய சப்தத்துடன் வெடித்து உடைந்தது.

## விமானப்படைக்காக ஏர்பஸ் நிறுவனம் தயாரித்த முதலாவது சி–295 ரக விமானம் இந்தியாவிடம் ஒப்படைப்பு

- ஸ்பெயினில் உள்ள ஏர் பஸ் நிறுவனம் இந்திய விமானப் படைக்காக சி–295 ரக விமானங்களைத் தயாரித்து அளிக்கவுள்ளது.

**குஜராத்தில் உற்பத்தி**

- இந்த ஒப்பந்தத்தின்படி 16 விமானங்கள் ஸ்பெயினிலும், 40 விமானங்கள் குஜராத்திலுள்ள வதோதராவில் உள்ள ஆலையிலும் உற்பத்தி செய்யப்படும்.
- வதோதரா ஆலையானது, ஏர் பஸ் நிறுவனமும், டாடா நிறுவனமும் கூட்டு சேர்ந்து ஏற்படுத்தியதாகும்.
- இந்த சி–295 எம்டபிள்யூ ரக விமானமானது 5 முதல் 10 டன் எடையை சுமந்து செல்லும் திறன் படைத்தது.

- உலகளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 31.5%
- எதிர்பார்ப்பு – 2030க்குள் உலக ஜிடிபி யில் 50% மாறுதல்

தலைமை

- உறுப்பினர்களுக்கிடையே சுழற்சி முறையில் B- R - I - C- S

**நோக்கம்**

- அமைதி, பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் கூட்டுறவை ஊக்குவித்தல்.
- மனிதநேய மேம்பாட்டிற்கு ஊக்கமளித்தல் + சமமான மற்றும் நியாயமான உலகை உருவாக்கல்.

**இந்தியாவிற்கு பிரிக்ஸ் கூட்டமைப்பின் முக்கியத்துவம்**

பொருளாதார வாய்ப்பு

- வளரும் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய சந்தை அணுகலை ஊக்குவித்தல்

இராஜதந்திர தளம்

- இதர பெரிய உலகளாவிய நாட்டுடன் இணைந்து செயல்படுதல்.
- உறுப்பு நாடுகளுக்கிடையே தொழில்நுட்பம் மற்றும் அறிவு பரிமாற்றம் செய்வதன் மூலம் நன்மை.
- உலகளாவிய நிதி நிறுவனத்தில் சீர்த்திருத்தங்களை மேற்கொள்ளும் தளம் மற்றும் உலகில் முடிவெடுக்கும் ஆற்றலாக மாற்றுதல்.

**பிரிக்ஸ் கூட்டமைப்பிற்கு இந்தியாவின் பங்களிப்பு**

- புதிய மேம்பாட்டு வங்கிக்கான முன்மொழிவு.
- 2012ல் டெல்லியில் நடைபெற்ற 4 வது கூட்டத்தில் முன்மொழிவு
- 2014 ஜீலையில் வங்கியை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.
- நோக்கம்
  - வளரும் நாடுகள் மற்றும் வெளிப்படும் சந்தையின் உள்கட்டமைப்பு மற்றும் நீடித்த வளர்ச்சி திட்டங்களுக்கான மூலங்களை ஒருங்கிணைத்தல்.

தலைமையிடம் : ஷாங்காய்

- பிராந்திய அலுவலகம் – தென் ஆப்பிரிக்கா

  – முதல் தலைவர் – இந்தியாவிலிருந்து
- பிரிக்ஸ் கூட்டமைப்பு நுட்பத்தில் நகரமயமாக்கலுக்கான மன்றத்தை இந்தியா இணைத்தது.

நோக்கம்

- பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே கூட்டமைப்பை உருவாக்கல் + அதிவேகமான நகரமயமாதலின் சவால்களை சரி செய்ய தகவல் பரிமாற்றம்.

**2014ல் நடைபெற்ற 6வது பிரிக்ஸ் மாநாட்டில் இந்தியா முன்மொழிந்தவை**

- இணைய வழி கல்வி, அணுகக்கூடிய சுகாதார சேவைக்கான தளம், மெய்நிகர் பிரிக்ஸ் பல்கலைக்கழகம், பிரிக்ஸ் மொழிகளுக்கான பள்ளி, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கிடையே கூட்டுறவு பேணுதல், சுற்றுலா, இளையோர் பரிமாற்றம், இளம் விஞ்ஞானிகள் மன்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை.

**பிரிக்ஸ் கூட்டமைப்பு முன் உள்ள சவால்கள்**

- பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே பலதரப்பட்ட பொருளாதார, அரசியல் மற்றும் மூலோபாய கருத்துக்கள் உள்ளன. இதனால் சில பிரச்சினைகளில் கருத்தொற்றுமை கொண்டு வர சிக்கல் உள்ளது.
- பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வு உள்ளது. ஒருங்கிணைந்த பொருளாதார கொள்கையை ஏற்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- நிறுவப்பட்ட அதிகாரம் மூலம் பிரிக்ஸ் நாடுகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. விரும்பிய சீர்திருத்தங்களை அடைவதில் சவால்களாக உள்ளது.

**முன்னோக்கிய பாதை**

- வர்த்தகம், தொழில்நுட்பம், புதுமை மற்றும் நீடித்த மேம்பாட்டில் கூட்டுறவை ஆழப்படுத்தல்.
- பிரிக்ஸ் நாடுகளுக்கிடையே பொதுவான இலக்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- நிதிசார் சீர்திருத்தம், காலநிலை செயல்பாடு மற்றும் பல்முனை உலகை ஊக்குவித்தல்.
- மக்களுக்கிடையே பிணைப்பை கலாச்சார மற்றும் கல்வி பரிமாற்றம் மூலம் வலுப்படுத்துதல்.
- வளர்ந்து வரும் உலகளாவிய இயக்கவியலை நிவர்த்தி செய்வதற்காக பிரிக்ஸ் அமைப்பு நெகிழ்வான மற்றும் வெளிப்படையாக இருத்தல் அவசியம்.



SURESH'